# சங்க இலக்கியப் பனுவலில் வேளாண்மைச் சடங்குகள்

**கரு.முருகன் / K.Murugan***
ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி / Sri Sevugan Annamalai College
தேவகோட்டை / Devakottai
prof.karumurugan@gmail.com

Manuscript received 25 March 2021
Manuscript accepted 14 June 2021
*Corresponding author/First Author

## Abstract
The people of ancient Tamilnadu were practically farmers in nature. They have been heavily depended on agriculture, for which they have heavily relied upon the nature and its grace for their livelihood. Whenever they began their activities, there have been several rituals performed by the farmers to peace the mother nature. Though the practices were still carried out till now, they have changed over time, from mere ritual forms to the worship of deities and idols. Such formalization must have taken into consideration of various facts and factors. The article is aimed at exploring such inputs in detail. The Madurai Tamil Grand Dictionary gives many meanings for agricultural lands, such as "land means place, place, land, nation, land". Global anthropological life basis on land is explored in this article as well. Geologicism is a series of rituals that reveal agriculture came to be on the land and the rituals that follow. For this, the article has consulted various evidence from Tamil classical literatures.

**Keywords**: Ancient Tamil, Agriculture in Ancient Tamil Nadu, Agriculture in Ancient Tamil Nadu, Agricultural and Rituals

### ஆய்வுச்சுருக்கம்
வேளாண்மைத் தொழில் செய்யும் மக்கள், இயற்கையை நம்பி வாழ்ந்து வந்தனர். வேளாண்மக்கள் இயற்கைக்காகச் செய்து வந்த சடங்குகள் கால மாற்றத்தில் தெய்வ வழிபாடாகவும், உருவ வழிபாடாகவும் மாற்றம் பெற்றன. “நிலம் என்பதற்கு இடம், தலம், நானிலம், தேசம், பூமி”[1] என்னும் பல பொருள்களாகத் தருகிறது மதுரைத் தமிழ் பேரகராதி. நிலம் என்பதன் அடிப்படையில் அமைந்த உலகமானுடவியல் வாழ்க்கை ஆராயப்படுகின்றது. நிலத்தில் எவ்வாறு வேளாண்மைகள் உண்டாயின என்றும், அதனைத் தொடர்ந்து சடங்கியல் வாயிலாக நிலவுலகியல் மக்களின் வாழ்வியலில் புலப்படுத்த சங்கிலித் தொடராக அமையப் பெறுகிறது. அதில் உள்ள சடங்குகள் அனைத்தும் இயற்கை சார்ந்தே உள்ளதனைச் சங்கநூல்கள் வாயிலாக அறிய முடிகிறது.

**கருச்சொற்கள்**: பண்டைத் தமிழர், பண்டைத் தமிழகத்து வேளாண்மை, பண்டைத் தமிழகத்துப் புன்செய் வேளாண்மை, வேளாண்மைச் சடங்குகள்

### முன்னுரை
வேளாண்மைத் தொழில் செய்யும் மக்கள், இயற்கையை நம்பி வாழ்ந்து வந்தனர். வேளாண்மக்கள் இயற்கைக்காகச் செய்து வந்த சடங்குகள் கால மாற்றத்தில் தெய்வ வழிபாடாகவும், உருவ வழிபாடாகவும் மாற்றம் பெற்றன. “நிலம் என்பதற்கு இடம், தலம், நானிலம், தேசம், பூமி”[2] என்னும் பல பொருள்களாகத் தருகிறது மதுரைத் தமிழ் பேரகராதி. நிலம் என்பதன் அடிப்படையில் அமைந்த உலகமானுடவியல் வாழ்க்கை ஆராயப்படுகின்றது. நிலத்தில் எவ்வாறு வேளாண்மைகள்

[1] . மதுரைத் தமிழ் பேரகராதி, ப-20.
[2] . மதுரைத் தமிழ் பேரகராதி, ப-20.

உண்டாயின என்றும், அதனைத் தொடர்ந்து சடங்கியல் வாயிலாக நிலவுலகியல் மக்களின் வாழ்வியலில் புலப்படுத்த சங்கிலித் தொடராக அமையப் பெறுகிறது. அதில் உள்ள சடங்குகள் அனைத்தும் இயற்கை சார்ந்தே உள்ளதனைச் சங்கநூல்கள் வாயிலாக அறிய முடிகிறது.

சடங்குகள் குறித்த சிந்தனைகள் அதனுடைய தன்மைகளையும் செயல்பாட்டினையும் காரணகாரியம் கருதி பல்வேறு இனக்குழுக்களிடம் பல்வேறு நிலையாக இருந்து வருகிறது. சடங்கு என்பதைக் காலங்காலமாகப் பின்பற்றப்படும் நடைமுறை நிகழ்வு என்றும் குறிப்பிடலாம். தமிழ் லெக்சிகன் அகராதி சடங்கு என்பதற்குப் பல்வேறு விளக்கம் தருகிறது. அவை, "1. Rite, Ceremony; சாஸ்திரவிதி பற்றியும் வழக்கம் பற்றியும் அனுஸ்டிக்குங் கிரியை, 2. Ceremony Performed at the pubescence of a girl; முதற் பூப்புச் சடங்கு, 3. Nuptials, Consummation; சாந்திக் கல்யாணம்"[3] ஆகியவையாகும். பண்டையக் காலம் தொட்டு இன்றைய காலம் வரையில் தமிழர்கள் வாழ்வில் சடங்குகளுக்கு முக்கிய இடம் கொடுத்து வருகின்றனர். அதில் வேளாண்மைத் தொடர்பான சடங்குகளும் அடங்கும். "உலகில் புகழ்பெற்ற பழைய நாகரிகங்கள் அனைத்தும் மருத நிலத்திலே தான் தோன்றின."[4] என்று மா.இராசமாணிக்கம் கூறுகிறார். சடங்கின் மையக்கருத்தினை வெளிப்படுத்தும் பக்தவத்சல பாரதி என்பார், "சடங்கு என்பது நிகழ்த்தப்படுகிறது (Ritual is performed) அழகியல் வெளிப்பாட்டுடன் ஓர் அதீதப்புலம் பாட்டினை வெளிப்படுத்துவது'Aesthetically marked and weightened mode of Communication)' (பக்தவச்சல பாரதி, 2002, பக்.175) மட்டுமல்ல சடங்கென்பது ஏதோ திடீர் என்று கண்டுபிடித்துப் புதிதாகச் செய்யப்படுவதில்லை மாறாக மக்களிடம் காலம் காலமாக நிலைபெற்று அனைவராலும் அறியப்பட்ட வகையிலேயே அது நிகழ்ந்தப்படுகிறது. சடங்கென்பது ஒன்றைச் செய்து இன்னொன்றைப் பெறுவதற்காக நிகழ்த்தப்படுவதாகும் 'Ritual is a performance of Something for someone' (Bauman. 1989. P.262) இந்தச் சடங்குகள் தனித்தன்மையும் பொதுத்தன்மையும் கொண்டவை."[5] என்கிறார். உலகப் புகழ் பெற்ற நாகரிகங்கள் பெரும்பான்மை வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டவையாகும். இக்கூற்றுத் தொடரியலாக அமையப் பெற்ற வேளாண்மைச் சடங்குகளைச் சங்கப் பனுவல் கொண்டுப் புலப்படுத்தலே இக்கட்டுரையாகும்.

### பொதுவான வேளாண் சடங்கு

பண்பட்ட நிலத்தினை உழுவதற்கு முன்பு நிலமகளையும் வேளாண்மைக்கு உதவி செய்கின்ற பொருள்களையும் வணங்கிய பின்பு விதையினை விதைக்கின்றனர். சித்திரை மாதம் மழை பெய்து நிலம் குளிர்ச்சி அடைந்த உடன் ஆண்டு முழுவதும் சேமித்து வைத்திருந்த இயற்கை உரமான எரு, சாணம் முதலானவையினைக் கூடையில் வைத்து வயலுக்கு எடுத்துச் சென்று அதனைத் தூவி விடுகின்றனர். தங்களது வயலினை உழத் தொடங்குவதற்கு முன்பு ஒவ்வொருவரும் தமது குலதெய்வத்தினை வணங்கி கலப்பை, தார்க்கம்பு, மண் வெட்டி, புனை தும்பு (காளையினைக் கலப்பையில் வைத்து கட்டுவதற்குப் பயன்படும் ஒரு வகைக் கயிறு), கொலு முதலான பொருள்களை வைத்துக் கதிரவனைப் நோக்கிக் கடந்த வருடம் நல்ல விளைச்சலைத் தந்தாய்! அதே போன்று இந்த வருடமும் தரவேண்டும்! என எண்ணிச் சாமி கும்பிடுகின்றனர். இதனைத் தொடர்ந்து நெல் விதைத்து வீடு திரும்புகின்றனர். இதன் பின்பு மழைக்காலம் அதாவது விதைப்புக் காலம் வரும் பொழுது நிலத்தினை உழுது விதைத்து வருகின்றனர். இத்தொழிலினை விட்டுவிடாமல் இன்றளவும் பின்பற்றி வருகின்றனர். இதனால்தான் வள்ளுவரும்,

> **"**உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
> தொழுதுண்டு பின் செல்பவர்**"** குறள் - 1033

என உழவுத்தொழிலின் முக்கியத்துவம் குறித்து விளக்கியுள்ளார். தற்கால மக்கள் நெல் விதையில் பல வகைகளை வைத்திருப்பது போல அக்காலத்திலும் இருந்துள்ளன. தற்காலத்தில் மக்கள் தேர்ந்தெடுத்த விதை நெல்லினைக் கொண்டு நாற்றினை உண்டாக்கி வருகின்றனர். "பருவ வேளைகளிலேயே நாற்றுப்

---

[3] . VOL.iii., University Of Madras. 1982, ப. 1240

[4] . மா.இராசமாணிக்கம், மொகஞ்சொதரோ சிந்துவெளி நாகரிகம், ப.58.

[5] . பக்தவத்சல பாரதி, தமிழர் மானிடவியல், ப.52.

பிடுங்கி நடுவதுதான் மிகவும் நுட்பமான வேலை."[6] எல்லா நெல்லினையும் விதையாகப் பயன்படுத்துவது கிடையாது. அனைத்தும் முளைத்து வராது என்பதால் நல்லனவற்றினை மட்டும் எடுத்து வைப்பார்கள். விதைக்கான நெல்லினை நன்கு காய வைத்த பின்பே அதனைப் பயன்படுத்துவர். பின்னர் அந்த நாற்றுகள் உரிய அளவு விளைந்தவுடன் நாற்றுப் பாவிய அல்லது வளர்த்த இடத்தில் இருந்து எடுத்துச் சென்று வயலில் மக்கள் இணைந்து நடுகின்றனர். இதே வழக்கம் சங்க இலக்கியத்திலும் இருந்துள்ளதனை,

"நீர் உறு செறுவின் நாறு முடி அழுத்த, நின்
நடுநரொடு செறிஆயின், அவண" (நற். 60)

இப்பாடலின் வழி அறிய முடிகிறது. இதே பாடலில், நிலத்தில் சிறிது நீரினைத் தேக்கிவைத்து நாற்று நடும் செயல் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பெற்றுள்ளது. அதே வழக்க முறையைத்தான் இன்றும் நம் உழவர்கள் பின்பற்றிவருகின்றனர்.

### விளைபொருட்கள்

ஒவ்வொரு தினை நிலைச் சமுதாயத்திற்கு அடிப்படையான உணவுப் பொருட்கள் உள்ளன. இவ்வகை அடிப்படை உணவுப் பொருட்கள் அந்தந்த நிலத்தின் வளத்தினைக் குறிக்கிறது. இத்திணையினை ஒவ்வொரு நல்ல நிகழ்வுகளிலும் சடங்குகளிலும் பயன்படுத்தி வந்துள்ளனர் நம் முன்னோர்கள். தங்களது நிலத்தில் விளைந்த தானியங்களை உணவாக உட்கொண்டுள்ளனர். வேற்று நிலத்தில் இருக்கும் மக்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களை பண்டமாற்றின் மூலம் பெற்றுள்ளனர். அந்ததந்த நிலத்தில் விளையும் பொருட்களை தங்களது வழிபடு தெய்வத்திற்குப் படையலாக வைத்துள்ளனர். இதனை,

"மறிக்கால் அறுத்து தினைப்பிரப் பிரீஇச்" (குறு. 263: 1-6)

தினையில் இரத்தம் தெளித்து இருந்தனர் என்ற செய்தியினைத் திருமுருகாற்றுப்படையும் விளக்கியுள்ளது. இதனை,

"உருவப் பல்பூத் தூஉய், வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பி, குறமகள்" (திருமுருகு: 242)

தினையை இரத்தத்துடன் கலந்து தூவி வழிபட்ட நிலை காட்டப்பட்டுள்ளது. ஆட்டின் இரத்தம் அதிக விளைச்சலைக் கொடுக்கும் சக்தியாகக் கருதப்பட்டுள்ளது. இரத்தம் உயிர்சக்தியின் அறிகுறி. இரத்தத்தில் விதை நனைக்கப்பட்டால் பயிர் நன்றாக வளரும் என்பது அக்கால மக்களின் நம்பிக்கை. அதேபோல் நெல்லும் வழிபாட்டு முறைகளும் ஒன்றாகக் கருதப்பட்டு வந்துள்ளது. இன்றும் ஒரு சில இனத்தில் இத்தகைய வழிபாட்டு முறைகள் பழக்கத்தில் உள்ளன.

### விளைபொருள் உணவுகள்

தமிழகத்தில் மிகப் பழங்காலம் தொட்டே உணவு தயாரிக்கப்பட்டு வந்த செய்தியினைச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. தொல்காப்பியத்தில் வரும் உணா என்ற சொல் உணவைக் குறிப்பதாகும். உணாவுக்குத் தமிழில் உள்ள சொற்களைப் பிங்கள நிகண்டு, "உணாவே வல்சி உண்டி ஓதனம் அசனம் பகதம் இசை ஆசாரம் உறை, ஊட்டம்" இவை தவிர புகா, மிசை என்னும் சொற்களும் உணவைக் குறிக்கப் பயன்பட்டிருக்கின்றன. இதே கருத்தினைத் தொல்காப்பியர் மரபியலில் கூறியுள்ளார்.

இதனை,

"மெய் திரி வகையின் எண்வகை உணவில் தொய்தியும் உரையார்"
(தொல். பொருள். 623).

[6] . நா.வானமாமலை, தமிழர் நாட்டுப் பாடல்கள், ப.397.

இங்கு எண்வகை உணவு குறிக்கப்படுகிறது. இளம்பூரணர் இதற்கு உரை கூறும்போது நெல், காணம், வரகு, இறுங்கு, தினை, சாமை, புல், கோதுமை என எண்வகைத் தானியங்களைக் குறிப்பிடுகிறார். சங்க காலத்தில் தமிழகத்தில் இருந்த சாமை, இறுங்கு, கோதுமை போன்ற தானியங்கள் பெரும்பாலும் உணவு பயன்பாட்டில் இல்லை. 'இறுங்கு' என்பது இன்றைய காலத்தில் இல்லை. உணவை ஐந்து வகையாகக் கூறுவது ஒரு மரபு. பிங்கல நிகண்டு கறித்தல், நக்கல், பருகல், விழுங்கல், மெல்லல் என ஐந்து வகையாகப் பகுத்துள்ளனர். உணவு நடைமுறையினை உண்பன, தின்பன, கொறிப்பன, நக்குவன, பருகுவன என பகுக்கப்பட்டுள்ளது. உண்பன என்பதற்கு அரிசிச் சாதம், புழுங்கல், பொங்கல் போன்றன உதாரணங்கள். சமைத்த காய்கறி கூட்டுகள் வரிசையில் பொரியல், அவியல், துவட்டல், துவையல் ஆகியனவும் கொறிப்பன வரிசையில் வற்றல், வடாம் போன்றனவும் அடங்கும்.

தொல்காப்பியம், எள் தானியத்தை உணவுப் பொருளாகக் கூறுகிறது. அகநானூற்றில் கொள்ளும் (காணம்) பாலும் கலந்து வைத்த கஞ்சி பற்றிக் குறிப்பு வருகிறது. அவரை விதையை அரிசியுடன் கலந்து தயாரித்த கஞ்சி பற்றிய குறிப்பை மலைபடுகடாம் தானியங்களை வெயிலில் காய வைத்துச் சமைக்கும் பழக்கம் இருந்திருக்கிறது. இதனை,

"செவ்வீ வேங்கைப் பூவின் அன்ன,
வேய் கொள் அரிசி, மிதவை சொரிந்து,
சுவல் விளை நெல்லின், அவரை அம்புளிங் கூழ்
அற்கு, இடை உழந்த நும் வருத்தம் வீட,
அகலுள் ஆங்கண் கழி மிடைந்து இயற்றிய
புல்வேய் குரம்பைக் குடிதொறும் பெறுகுவீர்;
பொன் அறைந்தன்ன நுண் நேர் அரிசி" (மலை. 435-440)

என்ற பாடலின் மூலம் அறிய முடிகிறது. பட்டினப்பாலையில் சோறு வடித்த கஞ்சியின் நீர் ஆற்றில் ஓடுகின்ற வெள்ளம் போன்று ஓடியது. என்பதை,

"சோறு வாக்கிய கொழுங் கஞ்சி
யாறு போலப் பரந்து ஒழுகி", (பட். **44-45)**

சாதம் எனப் பொதுவாக இன்று வழங்கப்படும் அரிசிச் சோறு, பொது வழக்கில் சோறு என்றே வழங்கப்பட்டிருக்கிறது. இன்றைய காலத்தில் சாதம் என்பது உயர் சொல்லாகக் கருதப்படுகிறது. சோறு என்பதற்கு அடிசில், அழினி, கூழ், அவிழ், கொன்றி, நிமிரல், புழுங்கல், பொம்மன், மிதவை எனப் பல சொற்கள் இருந்தன.

### வயலில் கிடைபோடும் வழக்கம்

தற்கால நெற்பயிர்களைப் போலச் செயற்கை உரம் இட்டு வளர்ந்தவை அல்ல, இயற்கை உரங்களினைப் பயன்படுத்தி நெல்லினை வளர்த்துள்ளனர். இதனை எண்ணித்தான் வயல்களில் எருமை, ஆடு, மாட்டினைக் கிடை போட்டு இருக்கின்றனர். ஆடு, மாடு, எருமையின் சானம் உரம் என்பதால் இதனை வயலில் தங்க வைத்துள்ளனர். இதனைக் கிடை போடுதல் ஆடு, மாடு அடைத்தல் என்பர். இவ்வழக்கம் சங்க இலக்கியதில் இருந்துள்ளது. சங்க இலக்கியத்தில் எருமையினை வைத்துள்ளதாக குறிப்பு உள்ளது. இதனை,

"ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்" (நெடு. **3-5).**

தற்காலத்தில் ஆடு, மாடு, எருமை மாடு வைத்திருத்தல் ஒரு தொழிலாகப் பார்க்கப்படுகிறது.

## நன்செய்ப் பயிர்கள்

நீராதாரம் உள்ள நல்ல நிலத்தை 'நன்செய்' அல்லது 'நஞ்செய்' என்றனர். இதில்தான் நெல்லும் கரும்பும் விளைவித்தனர். தரமான நெல்லை விளைவிக்க வேண்டுமெனில், நிலம் நன்கு பண்படுத்தப் பட்டிருக்கவேண்டும். அக்காலத்தில் நிலத்தை எவ்வாறு பண்படுத்தினர் என்பதனைப் பெரும்பாணாற்றுப்படையின்,

"குடிநிலை வல்சிச் செஞ்சால் உழவர்
நடைநவில் பெரும்பகடு புதவில் பூடி,
பிடிவாய் அன்ன மடிவாய் நாஞ்சில்
உடுப்பு முகமுழுக் கொழுமுழக ஊன்றி
தொடுப்பு எறிந்து உழுத துளர்படு துடவை" (பெரும். 198-201)

நெல் வயலுக்கு அருகில் உணவுப் பொருள்களால் நிறைந்த குடியிருப்புகளை உடைய உழவர்கள் நிலத்தைப் பல முறை உழுதனர். உழவுத் தொழிலில் நன்கு பயின்ற பெரிய எருதுகளைக் கலப்பையின் முன் பகுதியில் அமைந்துள்ள நுகத்தடியில் பூட்டி உழுவதற்குச் செல்வர். ஒருமுறை உழுதலை "ஒரு சால் உழவு" என்றும் இருமுறை உழுதலை "இரண்டுசால் உழவு" என்றும் கூறுவர். எனவே, "செஞ்சால் உழவர்" என்றதால் நிலத்தைப் பன்முறை உழுதனர் என்பது தெரியவருகின்றது. பல முறை உழுதல் என்பது மண் கட்டியாக இல்லாமல் புற்கள் அதாவது களைகள் அதிகம் வராமல் தடுப்பதாகும். அத்தோடு ஆழ உழுவதனையும் குறிக்கும். உழவு நன்றாக அமைய வேண்டுமெனில் இரு எருதுகளும் சரியாக நடக்க வேண்டும். இதனையே "நடை நவில் பகடு" என்று பெரும்பாணாற்றுப்படை அடிகளில் குறிக்கப்பெற்றுள்ளது. இன்றைய காலத்திலும் ஒரு சால் உழவு, இருசால் உழவு என்பதுடன் அதிகாலையில் உழுதால் பகற்பூட்டு என்றும், சாயங்காலம் உழுதுதால் அந்திப்பூட்டு என்றும் குறித்து வருகின்றனர்.

அக்காலம் முதல் இக்காலம் வரை நாம் கலப்பையின் அமைப்பினையும் கொழுவின் அமைப்பினையும் மாற்றவில்லை. அகலமாக உழ வேண்டும் என்பதற்காக வடிவினைத்தான் மாற்றி இருக்கின்றனர். பெரிய நிலத்தைப் பல ஏர்களைக் கொண்டு உழும்போது ஒவ்வொரு ஏரும் ஒரு வளையமாகப் போட்டு நிலம் முழுவதும் உழுது முடிப்பது வழக்கம். அவ் வழக்கம் இன்றும் (இயந்திரம் கொண்டு உழுதாலும்) பின்பற்றப்படுகின்றது. அதே வழக்கம் அக்காலத்திலும் இருந்துள்ளது என்பதனை "வளா கோலுதல்" அல்லது "தொடுப்பெறிந்து உழுதல்" என்ற சொற்களால் அறிய முடிகின்றது. "தொடுப்பெறிந்து உழுதல்" என்பது, கலப்பையால் வளைய உழுதல் என்று பொருள்படும். அக்காலத் தமிழர் உழவுக்கு எருதினை மட்டுமல்ல எருமையினையும் பயன்படுத்தினர் என்பதனை நற்றிணை உணர்த்தியுள்ளது. இதனை,

"மலை கண்டன்ன நிலை புணர் நிவப்பின்
பெரு நெற் பல் கூட்டு எருமை உழவ!" (நற். 60).

இப்பாடல் குறிப்பிடுவது போன்று தற்காலத்தில் எருமையினைப் பயன்படுத்தவில்லை. இன்றைய காலத்தில் காளை மாட்டினை மட்டுமே பயன்படுத்துகின்றனர். உழவு செய்யும் கருவியாலும் உழுது வருகின்றனர். அடிக்கடி உழுது வந்தால் மண் கட்டியாக இல்லாமல் விவசாயம் செய்வதற்கு ஏதுவாக இருக்கும். இதனை அறிந்த தமிழன் மழை பெய்கின்ற பொழுதெல்லாம் மாட்டினைக் கலப்பையில் பூட்டி உழுது வந்தான். இன்றும் கோடையில் அதாவது சித்திரை வைகாசி மாதங்களில் மழை பெய்தால் உழுது வருகின்றனர். இதனைக் கோடை உழவு என்கின்றனர்.

## மழை வேண்டுதல் சடங்குகள்

விவசாயம் செய்வதற்கு நீர் இன்றியமையாத ஒன்றாகும். நிலத்தினை உழுது அதில் விதையினை விதைப்பதற்கு தண்ணீர் தேவைப்படுகின்றது. தண்ணீரே விவசாயத்திற்கு இன்றியமையாத ஒன்றாகும்.

இதே நீரியல் கருத்தினை சங்க இலக்கியம் தொடங்கி திருவள்ளுவர் வரை குறிப்பிட்டுள்ளனர். நீர் என்பது எல்லாத் தேவைக்கும் பயன்படும் அத்தியாவசியப் பொருளாகும். இதனை,

“மலை வான் கொள்க! என, உயர் பலி தூவுய்,
மாரி ஆன்று, மழை மேக்கு உயர்க! எனக்
கடவுட் பேணிய குறவர் மாக்கள்,” (புறம். 143. 1-3).

புறநானூற்றுப் பாடல் வழி அறிய முடிகிறது. மலையில் வாழும் குறவர்கள் மழை வேண்டும் என எண்ணி தங்களது கடவுளை வணங்குகின்றனர். மலையில் உள்ள தங்களது கடவுளுக்குப் பலி கொடுத்து மழை பெய்ய வேண்டுதல் செய்கின்றனர். இதே வழக்கம் இன்றைய காலத்திலும் இருந்து வருகின்றது. ஒரு சில சமூகத்தினர் பலி கொடுத்தும், சைவப் பொருள்களை படையலாக வைத்தும் மழை வேண்டி தெய்வத்தை வணங்கி வருகின்றனர். மழை வேண்டும் என்பதனால் கிடாய் முதலான உயிர்ப்பலி கொடுத்தும் வேண்டுதல் செய்கின்றனர். இதனை,

“அமர்க்கண் ஆமான் அருநிறம் முள்காது
புணைத்த பகழிப்போக்கு நினைந்து கானவன்
அணங்கொடு நின்றது மலைவான் கொள்கெனக்
கடவுள் ஓங்குவரை வேண்மலர் வேட்டெழுந்து
கிளையொடு மகிழும் கான நாடன்” (நற். 165)

என்ற பாடல் அடிகளின் வாயிலாக அறிய முடிகிறது. மலைநாடன் ஒருவன் தான் எய்த அம்பு குறி தவறுவதற்குக் காரணம் மலையில் வாழும் தெய்வம் வெளிவந்து நின்றதே ஆகும் என்று கருதி, அத்தெய்வத்தின் சினம் தணிய மழை பெய்ய வேண்டும் என்று தன் சுற்றத்தாருடன் கூடி உயர்ந்த மலை மேல் சென்று பலியிட்டு நீர் வழிபாடு செய்ததனை அறிந்துகொள்ள முடிகிறது. தற்காலத்தில் மழை வேண்டும் என்பதன் பொருட்டு பலியிடுவதில்லை. நரிக்குறவர் சமூகம் மட்டும் மழைக்காகப் பலி கொடுத்து வருவதனை வழக்கமாக வைத்துள்ளனர். இவர்கள் வேளாண் தொழில் செய்யவில்லை என்றாலும் மக்களுக்காக இதனைச் செய்து வருகின்றனர். தங்களது சொந்த பணத்தில் எருமைக் கிடாய் வாங்கி இதனைச் செய்வதில்லை. மக்களிடம் பிச்சை எடுக்கும் பணத்தில் எருமை வாங்கி பலி கொடுக்கின்றனர்.

ஒரு சில சமூகத்தினர் அய்யனாருக்குப் புரவி எடுப்பின் மூலமாக மழை வேண்டுதல் சடங்கினைச் செய்து வருகின்றனர். புரவி முதலான பொருள் செய்து வைத்து தங்களின் வழிபாட்டினைச் செய்து வருகின்றனர். மழை பெய்யவில்லை எனில் தங்களது கிராமத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் சென்று சோறு குழம்பு சேகரித்து வந்து பெண்கள் அனைவரும் ஒன்று கூடி, பகிர்ந்து உண்ணுகின்றனர். உண்டது போக மீதம் இருக்கும் சோற்றினைக் கண்மாய்க்கரைக்கு எடுத்துச் சென்று, பெண்கள் அனைவரும் வட்டமாக அமர்ந்து கொண்டு மழை பெய்ய வேண்டும் எனக் கூறி ஒப்பாரி வைத்து அழுகின்றனர். மழை வேண்டி சோறு எடுப்பதால் இதனை மழைச்சோறு என்று அழைத்து வருகின்றனர். இதன் பின்பு மழை பெய்யும் என நம்பி வருகின்றனர். மழைச்சோறு தொடர்ந்து ஏழு நாட்கள் எடுக்கப்படுகிறது. பெண்களே இதனைச் செய்து வருகின்றனர்.

### வேளாண்மைத் தொழில் அல்லாதோர் மழை வேண்டுதல்

தற்காலத்தில் ஒரு சமூகத்தினர் வேளாண் தொழில் செய்யவில்லை என்றாலும் மழை வேண்டி பலி கொடுத்து வருகின்றனர். இவர்கள் ஒவ்வொரு கிராமமாகச் சென்று பாத்திரங்களின் ஓட்டைகளை அடைத்தல் தொழிலாலும், பாசி, சீப்பு முதலான பொருள்களினை விற்பனை செய்வதன் மூலமாகவும் வருமானம் ஈட்டி வருகின்றனர். சங்க இலக்கியத்தில் குறவர்கள் வேளாண் தொழில் செய்ததாகவும் அதற்கு வேண்டிய மழை பெறவும் பலி கொடுத்து உள்ளனர். இதனை,

"மலை வான் கொள்க! என, உயர் பலி தூவுய்,
மாரி ஆன்று, மழை மேக்கு உயர்க! எனக்
கடவுட் பேணிய குறவர் மாக்கள்" (புறம். 143. 1-3)

எனும் சங்க இலக்கியப் பாடல் வழி அறிய முடிகிறது. தற்காலத்திலும் குறவர் சமூக மக்கள் பலி கொடுக்கும் வழக்கத்தினைப் பின்பற்றி வருகின்றனர். குறவர் மக்கள் மழை வேண்டி ஆராவாரமான சத்தத்தினை எழுப்பினர் என்பதனை,

"குன்றக் குறவன் ஆர்ப்பின் எழிலி
நுண்பல் அழிதுளி பொலியு நாட" (ஐங். 251)

எனும் சங்கப் பாடல் மூலம் அறியலாகிறது. சங்க இலக்கியத்தில் இருந்து ஏதோ ஒரு நோக்கத்திற்காகப் பின்பற்றப்பட்ட பலியிடும் வழக்கம் இன்றைய காலத்திலும் தொடர்ந்து வருகின்றது. இத்தரவினைக் கள ஆய்வின் வழி அறிய முடிகிறது. தற்காலத்தில் இச்சமூகத்தினர் வேளாண் தொழில் செய்யவில்லை என்றாலும் மழை வேண்டி காளி தெய்வத்திற்கு எருமைக் கிடாய் பலி கொடுத்து வருகின்றனர்.

**காவல்முறை**

விளைநிலங்களை விலங்குகள் நாசம் செய்து விடாமல் இருப்பதற்காக காவலர்கள் நியமிக்கப்பட்டனர். நெல் முதலான பயிர் வகைகளுக்குத் தண்ணீர் திறந்து விடுவதற்காக கிராமத்தினரால் நியமனம் செய்யப்படுகிறார். இதனை,

"மாரி கடி கொள காவலர் கடு" (ஐங். 29: 1)

எனும் பாடலடி விளை நிலத்திற்காக காவலர் நியமித்த செய்தியினை விளக்குகிறது. விவசாயம் செய்கின்ற மக்கள் தங்களது நிலத்தில் விளைந்த பொருட்களைக் கூடைகளில் எடுத்துச் செல்லுகின்றதனை,

"அகன் பெருவட்டி நிறைய மனையோள்
அரிகாற் பெரும் பயறு நிறைக்கும் ஊர" (ஐங். 47: 2-3)

பெரிய பாத்திரத்தில் நெல்லினை வீட்டிற்குக் கொண்டு வந்தனர் என்ற விளக்கத்தினைத் தருகிறது. பனை மட்டையின் நாரால் செய்யப்பட்ட பொட்டியில் நெல்லினைக் கொண்டு வந்து வீட்டில் சேமித்து வைக்கின்றனர். பயிர்களைத் தின்ன வருகின்ற மயில் முதலான பறவைகளை விரட்டிக் கொண்டே இருக்க முடியாது என்ற காரணத்தினால் மனிதன் தன்னைப் போன்றே ஒரு பொம்மையினை வடிவமைத்து தங்களது நிலத்தில் வைத்தான். இதனைப் பார்க்கும் உயிரினங்கள் ஆள் காவலுக்கு நிற்கின்றனர் என்று எண்ணி விவசாய நிலத்திற்குள் வருவதில்லை. இதனைச் சோளக்காட்டுப் பொம்மை என அழைத்து வருகின்றனர். இதனை,

"கல்முகை வயப்புலி கழங்கு மெய்ப்படூஉ
புன்புலம் வித்திய புனவர் புணர்த்த
மெய்ம்மை அன்ன பெண்பாற் புணர்ந்து" (ஐங். 246: 2-4)

என்னும் சங்கப் பாடல் கதிர்களைத் தின்ன அல்லது நாசம் செய்ய வருகின்ற பறவைகளை விரட்ட அக்கால மக்கள் செய்த உத்தி முறையினை வெளிப்படுத்துகிறது. இதே போன்றுவிளை நிலங்களுக்கு வரும் பறவைகளை ஒலி எழுப்பியும்விரட்டி இருக்கின்றனர். இதனை,

"சாரற் புறத்த பெருங்குரற் சிறுதினைப்
பேர் அமர் மழைக்கண் கொடிச்சீஇ கடியவும்
சோலைச் சிறுகிளி உன்னும் நாட" (ஐங். 282: 1-3)

என விளக்கம் தருகிறது சங்கப் பாடல். விளை நிலங்களை வீணடிக்கும் பறவை மற்றும் பிற உயிரினங்களைத் துன்புறுத்தாமல் விரட்டிவதற்காக இவ்வகை ஒலி எழுப்புதல் முறையினைப் பின்பற்றுகின்றனர். இது சங்க இலக்கியத்தில் இருந்த பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றாக இருந்தாலும் அதன் தொடர்ச்சி இன்றும் இருந்து வருகின்றது. தட்டு, கவணைக் கொண்டு ஒலி எழுப்பி பறவையினை விரட்டி இருக்கின்றனர். இதனை,

"செவ்வாய்ப் பாசினம் கடீஇயர், 'கொடிச்சி'
அவ்வாய்த் தட்டையொடு அவணை ஆக!' என" (நற். 134. 4-5).
"தட்டையும் புடைத்தனை, கவணையும் தொடுக்க என
எந்தை வந்து உரைத்தன்னாக, அன்னையும்" (நற். 206: 5-6).

எனும் சங்கப் பாடல்கள் விளக்கம் தருகின்றன. தட்டு, கவண் என்பவை மக்களின் புலங்கு பொருள்களாகும். கவண் என்பது கம்பினாலான ஒரு வகை மரக்கிளையாகும். வளர்ச்சி அடைந்த இன்றைய காலத்திலும் மக்கள் இந்தப் பொருள்களினை வைத்தே பறவைகளினை விரட்டி வருகின்றனர்.

**கதிர் அடிக்கும் முறை**

அக்காலத்தில் நெல் முற்றி கதிர் அடித்ததனை,

"பகடு ஊர்பு இழிந்த பின்றை துகள்ப
வையும் துரும்பும் நீக்கிப் பைது அற
குடகாற்று எறிந்த குப்பை வடபால்
செம்பொன் மலையின் சிறப்பத் தோன்றும்" (பெரும். 238-241)

எனும் சங்கப் பாடல் வழி அறிய முடிகிறது. இதே நிலை இன்று கிராமப் புற மக்களிடம் இருந்து வருகின்றது. நெல் அடிப்பதும், காற்று அடிக்கும் திசைக்கு ஏற்ப நெல் தூற்றுவதும் வழக்கில் இருந்து வருகின்றன. இதன் மூலம் நல்ல மணிகள் ஒரே இடத்தில் குவிந்து வரும் பதர்கள் அதனை விட்டு நீங்கிக் காற்றில் பறந்து விடும். வயலில் அறுவடை செய்த கதிரினை எடுத்து வந்து அடித்த பின்பு நடுப்பகுதியில் சில நெல் மணிகள் உதிராமல் இருக்கும். வைக்கோளில் நெல் ஒட்டி இருந்தால் அதனைக் கீழே விழச் செய்வதற்காக காளை மாட்டினை ஒன்றாக இணைத்து கதிர் அடித்துப் போடப்பட்ட இடத்தினை வளம் வரச் செய்வர். இதனைச் செய்கின்ற போது நெல் மணிகள் உதிர்ந்து விடும். இதன் பின்பு வைக்கோலினைத் தனியாக உதறி எடுத்து அதனைச் சேகரித்து வைப்பர். இப்பண்பாடு சங்க இலக்கியம் தொடங்கி இன்றுவரை இருந்து வருகிறது என்பதனைக் காண முடிகிறது. இவ்வழக்கத்தினை,

"வேங்கைக் கண்ணியர் எருது எறி கலிமர்
நிலம் கண்டன்ன அகன் கண் பாசறை,
மென் தினை நெடும் போர் புரிமார்" (நற். 125: 8-10)

"பகடு ஊர்பு இழிந்த பின்றை துகள்ப
வையும் துரும்பும் நீக்கிப் பைது அற
குடகாற்று எறிந்த குப்பை வடபால்
செம்பொன் மலையின் சிறப்பத் தோன்றும்" (பெரும். 238-241).

எனும் சங்கப் பாடல்கள் கதிர் மற்றும் போர் அடிக்கும் முறையினை எவ்வாறு செய்து வந்தனர் என்பதனை விளக்குகிறது.

**வைக்கோள்போர் பற்றியது**

கதிரினை அறுத்து முடித்த பின்பு அடித்து நெல் தனியாகவும் வைக்கோள் தனியாகவும் பிரித்து வைப்பர். சேமித்து வைக்கப்படும் வைக்கோள் கோடைக் காலத்தில் மாடுகளுக்கு உணவாகப் பயன்படுகிறது. இதனை ஒழுங்கு முறையில் அடுக்கி வைப்பர். மழைக் காலத்திலும் பிற நேரங்களிலும் சேதம் ஏற்படாமல் பாதுகாப்பாக வைப்பதற்காக ஒரு சீரான முறையில் வரிசைப்படுத்தி வைத்திருப்பர். சிலர் பரன் போன்று அமைத்து அதன் மேல் சேமித்து வைக்கின்றனர். இதனை,

"நலத்தகைப் புலத்தி பசைதோய்த்து எடுத்துத்
தலைப்புடைப் போக்கித் தண் கயத்து இட்ட
நீரின் பிரியாப் பரூஉ திரி கடுக்கும்" (குறு. 330: 1-3).

எனும் சங்கப் பாடல் உணர்த்துகிறது. தற்காலத்திலும் கிராமப் புறங்களில் உள்ள விவசாயம் சார்ந்த மக்கள் மாடு வைத்திருந்தால் வைக்கோள் சேமித்து வைக்கும் வழக்கத்தினைப் பின்பற்றி வருகின்றனர்.

**நிறைவுரை**

பஞ்ச பூதங்களையும் வணங்கி வந்த மனிதன் தனக்கு உணவு தரக்கூடிய நிலமகளையும் நன்றியோடு நினைத்து வழிபட்டான். அறுவடைக் காலம் முடிந்த உடன் இலையுதிர் காலம் தொடங்கும். இலை, தளைகள் அனைத்தும் உரம் என்பதனை உணர்ந்த மனிதன் பங்குனி மாதம் மழை பெய்கின்ற பொழுது நிலத்தினை உழுது அதனைப் பக்குவப்படுத்துகிறான். உரம் வெளியே சென்று விடாமல் இருப்பதற்காக உழவு செய்கிறான். உழவின் மூலம் மேலே உதிர்ந்த இலைகள் எல்லாம் மண்ணிற்குள் சென்று உரமாக மாற்றம் பெறுகிறது. பயிர் விளைவதற்கு நிலமே அடித்தளமாக இருக்கின்றது. நீர் அதற்கு உறுதுணையாக இருந்தாலும் நிலமே அதன் உயிராகும். சங்க இலக்கியப் பனுவல் வேளாண் கூற்றினை வாயிலாக இயற்கையின் மகத்துவதை காலந்தோறும் உள்ள தலைமுறைக்குப் பதியம் செய்யப் படுகிறது. நாகரிகத்தின் உச்சியில் வாழ்பவர்களிடையிலும் எல்லாக் காலங்களிலும் சடங்குகள் நிகழ்த்தப்பட்டு வந்துள்ளன. உலக மொழிகளில் இலக்கணச் செறிவு, இலக்கியச் செழுமையும் வாய்ந்த மொழி நம் தாய் மொழி ஆகும். தாய்மொழியில் பண்பட்ட சிந்தனைகளும், செம்மார்ந்த சடங்கியல் பண்புக்கூறுகள் மிகவும் பொதிந்துள்ளன.

**சுருக்கக் குறியீட்டு விளக்கம்**

1. ஐங். - ஐங்குறுநூறு
2. குறள். - திருக்குறள்
3. குறு. - குறுந்தொகை
4. திருமுருகு. - திருமுருகாற்றுப்படை
5. தொல். பொருள். - தொல்காப்பியம், பொருளதிகாரம்
6. நற். - நற்றிணை
7. நெடு. - நெடுநல்வாடை
8. பட். - பட்டினப்பாலை
9. புறம். - புறநானூறு
10. பெரும். - பெரும்பாணாற்றுப்படை
11. மலை. - மலைபடுகடாம்

**சான்றெண் விளக்கம்**

*மதுரைத் தமிழ் பேரகராதி.* (Vol. 3). (1982). Madras: University of Madras.

இராசமாணிக்கம், மா. (1999). *மொகஞ்சொதரோ சிந்துவெளி நாகரிகம்*. சென்னை: கழக வெளியீடு.

பக்தவத்சல பாரதி. (2008). *தமிழர் மானிடவியல்*. சென்னை: அடையாளம் பதிப்பகம்.

வானமாமலை. (2004). *தமிழர் நாட்டுப் பாடல்கள்*. சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.